Paper ID: IDU07

# வாழ்க்கை வண்ணங்கள் சிறுகதை தொகுதியினூடே புலப்படுத்தப்படும் திருமணம் சார்ந்த பிரச்சினைகள்

**MR. M. S. M. Mafaz**

Department of Languages, South Eastern University of Sri Lanka
mafazmsm@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்க்கையில் பல பருவங்களையும் பல காலகட்டங்களையும் கடக்கின்றனர். அந்த ஒவ்வொரு பருவங்களிலும் ஒவ்வொரு காலகட்டங்களிலும் சில சம்பவங்கள், சில சம்பிரதாயங்கள் சில நிகழ்வுகள் அவர்களுக்கு முக்கியத்தும் உடையதாகக் காணப்படுகின்றன. அவ்வாறு இளமைப் பருவத்தில் காணப்படுகின்ற முக்கியமான நிகழ்வாகத் திருமணம் உள்ளது. கால, சூழல் சமூக அமைப்பைப் பொறுத்து திருமண நிகழ்வில் சில பிரச்சினைகள் தோன்றுகின்றன. மலையக முஸ்லிம் சமூகத்திலே திருமணத்தின் போது இவ்வாறு தோன்றும் பிரச்சினைகள் நயீமா சித்தீக்கீன் வாழ்க்கை வண்ணங்கள் என்ற சிறுகதைத் தொகுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இச்சிறுகதைத் தொகுதி இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு சிந்தனை வட்டத்தால் வெளியிடப்பட்டது. இச்சிறுகதைத் தொகுதியின் ஊடாக சீதனப்பிரச்சினை உள்ளடங்களாக மணமகன் தொடர்பாக பெய்யான தகவல்களைச் சொல்லுதல், திருமணம் முடித்துக் கொடுக்கப்படும் பெண்கள் கணவனின் வீட்டில் கொடுமைப்படுத்தப்படல், ஏற்கனவே மணமகன்மார் களவாக வேறு திருமணங்களைச் செய்திருத்தல், பொருத்தமான மணமகனும் மணமகளும் மணம் முடிக்கப்படாமை, படித்த இளைஞர்கள் திருமணத்தின் மூலம் பணக்கார வீட்டவர்களின் அடிமையாக்கப்படுதல் போன்ற இன்னோரன்ன பல பிரச்சினைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய பிரச்சினைகளை ஆராய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** வாழ்க்கை வண்ணங்கள், சிறுகதை, திருமணம், பிரச்சினைகள்

**அறிமுகம்.** மலையக முஸ்லிம்கள் தனியான பல பண்புகளைக் கொண்ட ஒரு கிளை இனக்குழுமத்தினராவர். கண்டிச் சிங்களவர்களால் 'கொவிகுலம' எனப்படும் வெள்ளாள குலத்தவர்களுக்கு இணையாக மலையக முஸ்லிம்கள் கருதப்பட்டனர். மலையக முஸ்லிம்களின் வாழ்க்கை முறையில் இலங்கையின் ஏனைய இனத்தவர்களினுடைய கலாசாரத்தின் தாக்கம் உள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாகத் தமிழ் கலாசாரத்தின் தாக்கம் ஆங்காங்கே பிரதிபலிக்கின்றது. சீதனச் சம்பிரதாயமும் தமிழர்களினூடே மலையக முஸ்லிம் சமூகத்துக்குள் நுழைந்த ஒரு அம்சமாகும். குறிப்பாக மலையக முஸ்லிம்களின் திருமண முறைக்கும் தமிழர்களின் திருமண முறைக்கும் இடையில் நிறைய ஒற்றுமைகளைக் காணலாம். சமூகக் கட்டமைப்பில் இன்னொரு இனத்தை பின்பற்றுதல் என்பது சில வெற்றிகளுக்கு காரணமாவது போல் சில பிரச்சினைகளுக்கும் காரணமாகின்றன.

திருமணம் என்பது ஒவ்வொருவரினதும் வாழ்வின் திருப்பு முனையாக உள்ளது. திருமணம் இனிமையானதாக இருந்தாலும் திருமணத்துக்கு சமூகக் கட்மைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ள செயன்முறைகளை பூர்த்தி செய்வது என்பது பகீரதப்பிரயத்தனமாக உள்ளது. திருமணத்துக்கான மிகப் பெரிய சவாலாக தமிழர்களின் சம்பிரதாயத்தில் இருந்து மலையக முஸ்லிம் சமூகத்துக்குள் நுழைந்த

சீதனம் உள்ளது. சீதனம் என்ற சமபிரதாயத்தால் பல பெண்கள் திருமணம் முடிக்க முடியாது தவிக்கின்றனர். நயீமா சித்தீக்கின் வாழ்க்கை வண்ணங்கள் என்ற சிறுகதைத் தொகுதியில் பிரதானமக சீதனப் பிரச்சினையுடன் திருமணம் சார்ந்த இன்னும் பல பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன. எனவே அவற்றை ஆராய்வதாக இவ்வாய்வு அமையும்.

**நோக்கம்.** நயீமா சித்தீக்கின் வாழ்க்கை வண்ணங்கள் சிறுகதைத் தொகுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள திருமணம் சார்ந்த பிரச்சினைகளை ஆராய்வதை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

**கருதுகோள்.** வாழ்க்கை வண்ணங்கள் சிறுகதைத் தொகுதியில் மலையக முஸ்லிம்களின் திருமணம் சார்ந்துள்ள பல பிரச்சினைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்ற கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு செய்யப்படுகிறது.

**ஆய்வுப்பிரச்சினை.** வாழ்க்கை வண்ணங்கள் சிறுகதைத் தொகுதியில் மலையக முஸ்லிம்களின் திருமணம் சார்ந்த பிரச்சினைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்ற ஆய்வுப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு செய்யப்படுகிறது.

**ஆய்வு முறையியல்.** இவ்வாய்வுக்கு முதல்நிலை ஆதாரங்களும் துணைநிலை ஆதாரங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல்நிலை ஆதாரங்களாக நயீமா சித்தீக்கினால் எழுதப்பட்ட வாழ்க்கை வண்ணங்கள் சிறுகதைத் தொகுதியில் உள்ள பதினைந்து சிறுகதைகள் பகுப்பாய்வு செய்து பயன்படுத்தப்பட்டுள்ளன. நயீமா சித்தீக்குடன் நேர்காணலின் மூலம் பெறப்பட்ட தரவுகளும் இச்சிறுகதைத் தொகுதிக்கு பேராசிரியர் எம். எஸ். எம் அனஸ் எழுதிய முன்னுரையும் துணைநிலை ஆதாரங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்கு விவரண அணுகுமுறை பிரயோகிக்கப்பட்டுள்ளது.

**மணமகன் தெடர்பாக பொய்யான தகவல்களைச் சொல்லுதல்.** போலி கௌரவங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் திருமணத்தின் போது பெண் வீட்டாரிடம் இருந்து அதிகமான சீதனத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் பெண் வீட்டாரிடம் மணமகன் தெடார்பாக பெய்யான தகவல்கள் சொல்லப்படுகிறது. மணமகனுக்கு இல்லாத தகுதிகள் இருப்பதாக கூறுவதன் மூலம் மணமகன் வீட்டார் மணகளின் வீட்டாரிடம் திருமணத்தை நடத்த அதிகமான விடயங்களை எதிர்பார்க்கின்றனர். அவர்கள் எதிர்பார்க்கின்ற விடயங்கள் பணமாகவோ பொருளாகவோ அமையலாம். உதாரணமாக ஒரு மோதினார் கலியாணம் பேசுகிறார் என்ற சிறுகதையில் மோதினார் பாடசாலையில் கற்றுக்கொடுக்கும் தனது மகனை பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொடுப்பதாகக் கூறுகிறார். இச்சிறுகதையின் கீழ்வரும் பகுதி இதற்கு சிறந்த உதாரணமாகும்.

‘‘வாப்பா……உங்களுக்கு ‘‘கோல்’’……. ரீஸீவர் கைமாறியது. ‘‘ஹலோ…. அஸ்லாமு அலைக்கும்’’

‘‘வஅலைக்குமஸ்ஸலாம். நான் காலைல பேசினேன்….. உங்கட மனைவி நீங்க ராவைக்குத்தான் வருவீங்க என்டு சொன்னாங்க….’’

‘‘ஓ…… சொன்னாங்க…….இனி விஷயம் என்ன?’’

‘‘இங்க…. ஒரு மாப்பிள்ளை இரிக்காரு……… யூனிவசிட்டியில வேல….. படிச்சிக் குடுக்கிறாரு……’’

‘‘நல்லம் என்னா படிச்சிருக்கிறாரு…….’’

‘‘அவரு பீ. ஏ படிச்சிருக்கிறாரு’’

“பீ. ஏ மட்டும் படிச்சா யூனிவசிட்டியில படிச்சிக்குடுக்கிற வேல கெடைக்காதே………..

“இல்ல….. இல்ல…… ஒரு ஸ்கூல்லதான் படிச்சிக்குடுக்கிறாரு……”

ரகுமான் மாஸ்டருக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. என்றாலும் அடக்கிக் கொண்டார். மோதினார் தொடர்ந்தார்…..

“உங்கட மகளப்பத்தி ஒருத்தர் எல்லா விபரமும் சொன்னார்…..அவருக்கிட்ட இருந்து தான் உங்கட டெலிபோன் நம்பரையும் எடுத்தேன்…..ஆனா……”

“சொல்லுங்க…………”

“மாப்பிள்ளை வேறு யாருமில்ல…… ஏன்ட மவன்தான்……. உங்கட மகளுக்கு எவ்வளவு சம்பளம் கெடைக்குது என்டு மட்டும்….. சொல்லுவீங்களா…….? [179]

**திருமணம் முடித்துக் கொடுக்கப்படும் பெண்கள் கணவனின் வீட்டில் கொடுமைப்படுத்தப்படல்.**
திருமணத்தின் போது கணவனின் வீட்டாரினால் அன்பாக அழைத்துச் செல்லப்படும் பெண்கள் சில நாட்களுக்குப் பின் கணவரின் வீட்டில் உள்ளவர்களாலே கடுமையாக கொடுமைப்படுத்தப்படுகின்றனர். சீதனம் தேவை இல்லை என்று திருமணத்தை நடத்திய மணமகனின் குடும்பத்தவர் சீதனம் வழங்கப்படாததை காரணமாக வைத்தே இவ்வாறு பெண்களை கொடுமைப்படுத்துகின்றனர். வீட்டின் அனைத்து வேலைகளும் அத்தகைய பெண்களுக்கு வழங்கப்படுகிறது. மணமகனின் வீட்டாரினால் அத்தகைய பெண்கள் வேலைக்காரிகள் போன்று நடத்தப்படுகிறார்கள். விருந்தினர் முன்னே அவர்களுக்கு உரிய கௌரவம் இழக்கச் செய்யப்படுகிறது. இவ்வாறு அவதிப்படும் பெண்கள் இறுதியில் மனநோயாளிகளாகக் கூட மாறுகின்ற நிலை உருவாகிறது. ஒரு மகள் சீதனம் கேட்கிறாள் என்ற சிறுகதை இதற்கு நல்ல உதாரணமாகும். இக்கதையில் காதிரின் வீட்டார் சீதனம் எடுக்காது முனீராவை காதிருக்கு திருமணம் செய்து கொடுத்து விட்டு திருமணம் முடிந்து சில நாட்களின் பின் முனீராவைக் கொடுமைப்படுத்த ஆரம்பிக்கின்றனர்.

“காதிரின் குடும்பத்தார் சுயருபத்தைக் காட்டத் தொடங்கிய போது முனீராவின் கருவிலே யாஸீரும் வளரத் தொடங்கியாகிவிட்டது.

தொட்டதற்கெல்லாம்,

“பெரிய சீதனம் செனத்தியோட வந்துட்டாங்களா………….வெறுங்கையை வீசிக்கிட்டு வந்தவங்க தானே……….. இப்ப பெரிய சுகம் கேக்குதோ என்ற வசைகள்…………

காதிரின் சகோதரிகள், தாய் ஆகியோருடன் எங்காவது புறப்பட்டால் அவர்கள் நகைகளை அள்ளிக் குவித்து அணிந்து கொண்டு..

“சே….. வெளியே போற போது போட்டுக்கிட்டுப் போக நாலு நல்ல நகைகளையாவது கொடுக்கிறதுக்கு உம்மா வாப்பாவுக்கு தெரிய வாணாமா? என்ற குத்தல் கதைகள்…….

அவள் மசக்கையால் சிறிது உட்கார்ந்தால்……….

“மகாராணிக்கு “ரெஸ்ட்” கேக்குதோ……… ஏன்………….. வாப்பாகிட்ட சொன்னாதான் வரிசையா ஒன்றுக்கு மூனு நாலு வேலைக்காரிகள அனுப்பிடுவாங்களே என்ற நெருப்புச் சூடுகள்….

மெது மெதுவாய் அந்தப் பெரிய குடும்பத்தின் அத்தனை வேலைகளும் அவளது தலையின் மேல் சுமத்தப்பட்டு……..

தனது நிலை தெரிந்தால் பெற்றவர்கள் கவலைப்படுவார்களே என்று முனீரா எல்லாவற்றையும் தனக்குள்ளாகவே போட்டு புதைத்துக் கொண்டாள்.[180]

---

[179] **வாழ்க்கை வண்ணங்கள் (சிறுகதைத் தொகுதி), பக்கங்கள் - 95, 96**
[180] **வாழ்க்கை வண்ணங்கள் (சிறுகதைத் தொகுதி), பக்கங்கள் - 43, 44**

**ஏற்கனவே மணமகன்மார் களவாக வேறு திருமணங்களைச் செய்திருத்தல்.** ஏற்கனவே திருமணமான ஆண்கள் தமது முதல் திருமணத்தை மறைத்து வேறாரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள முயற்சி செய்கின்றனர். தனது சொந்த ஊரில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பை நாடிச்செல்லும் இளைஞர்களே அதிகமாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் காணலாம். அவர்களது அடுத்த திருமணம் முதலாவது தாரத்தை விவாகரத்து செய்யாமலே நடைபெறுகிறது. தமது முதல் திருமணத்தை சாமர்த்தியமாக இவ்வாறானோர் மறைக்க முயற்சி செய்கின்றனர். இவ்வாறு இவர்கள் ஏற்கனவே திருமணம் செய்திருப்பது இவர்களது பெற்றோருக்குக் கூட தெரியாமல் இருக்கிறது. முதலாவது திருமணம் பகிரங்கமாகமல் இருப்பதற்கு பல சூட்சகமான நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொள்கின்றனர். இதனால் ஏற்கனவே இவர்கள் திருமணம் முடித்த பெண்ணும் அவர்களது குழந்தைகளும் பாதிக்கப்படுவது போல் இரண்டாவதாக திருமணம் முடிக்கப்பட இருக்கின்ற பெண்ணும் பாதிக்கப்படுகின்றாள். மணமகனின் சுயரூபம் திருமண ஏற்பாடுகள் நடந்த பின்பு வெளிப்படும் நிலையில் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம் நின்று போகிறது. இந்நிலையில் மணமகளாகக் கனவு கண்ட பெண்ணுக்கு ஊரில் தலை காட்ட முடியாத நிலை ஏற்படுகிறது. ஏற்கனவே திருமணம் பேசப்பட்ட பெண் என்ற பழிச்சொல்லை அவள் பெறுவதால் அவளுக்கு இன்னுமொரு திருமணத்துக்கான வாய்ப்பும் தடைப்படுகிறது. இதற்கு இருதுருவங்கள் என்ற சிறுகதை சிறந்த உதாரணமாகும்.

''வாசற்கதவு தட்டப்படும் சப்தம்…….

தொடர்ந்து அழைப்பு மணியும் ஒலிக்க………..

யாஸீன் போய் பார்த்தார்……..

''கையில் ஒரு குழந்தை…… இடுப்பில் ஒரு குழந்தை……. நடுத்தர வயதுப் பெண்……….

''யார் யாரைப் பார்க்கணும்……………''

பதில் சொல்லாமல் திறந்த கதவுவழியே அவளே நுழைந்தாள்…….

குடும்பத்தினர் எல்லோரும் பரபரப்பாய் கூடிவிட்டனர்.

கைப்பையைத் திறந்தாள்…. பரபரவென்று ஒரு சிறிய அல்பத்தை எடுத்து யாஸீனின் முகத்துக்கு நேரே நீட்டினாள். …….

''பாருங்க….. நல்லாப்பாருங்க….'' சில பக்கங்களைப் புரட்டியவர் அப்படியே நாற்காலியில் தொப்பென விழுந்தார்.

வந்த பெண் கைப்பைக்குள் இருந்த சில ஆவணங்களை எடுத்து அங்கு நின்ற பஸீனாவின் மூத்த சகோதரனிடம் நீட்டினாள்.

வாசிச்சிப் பாருங்க ப்ரதர்……..''

ஓ…..யாஅல்லாஹ்வே இதென்ன விபரீதம்?

கமால் வந்திருக்கும் பெண் சகிதமாய் வகைவகையான நிலைகளில் படங்கள்…………………. அநேகமாக அப்படங்கள் சவூதியில் பிடித்தவைகளாக இருக்க வேண்டும். பின்னால்……. பின்னால்…….இக்குழந்தைகளுடன் அவர்கள்…..குழந்தைகளின் தனித்தனிப்படங்கள்…. அல்பம் நிறைய…. நிறைய…….. யாஸினால் பக்கங்களைப் புரட்ட முடியவில்லை….

பஸீனாவின் சகோதரனிடம் கொடுத்த ஆவணங்கள் - கமாலின் திருமணப் பதிவு சான்றிதழ் - பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்….. வந்திருக்கும் பெண்ணின் பெயர் சித்தி நஜீபா…. ஊர் பொலன்னறுவை கதுறுவல.

அவளின் தோற்றமே அவளும் மத்தியகிழக்கில் வேலை செய்தவள் என்பதைக் காட்டியது.

மௌனத்தைக் கலைத்து அவளே பேசினாள். எல்லோரும் என்னை மன்னிச்சிக்கோணும் கமால் ஏன்ட புருஷன்…. இது எங்கட புள்ளைங்க…..அவரு இங்க கலியாணம் செய்யப் போறாரு என்பது இன்டைக்கு காலையிலதான் எனக்கு தெரிஞ்சிச்சி.

இப்போது வந்தவள் தைரியமிழந்து ''கோ'' வென்று கதறி அழத் தொடங்கினாள்.

''சவூதியில் இவரோட நண்பன் சுனில்தான் எனக்கு காயிதம் அனுப்பி இரிந்தான்…. அவனுக்கு எங்கட கலியாணம், புள்ளைங்க எல்லாமே தெரியும்…. எங்கட ஊட்டுக்கும் வந்திரிக்கான்…. அவன் மாறுஜாதியா இருந்தாலும் நல்லவன்…..''

அல்பம், ஆவணங்கள் அனைத்து குடும்பத்தாரினதும் கைக்குக் கை மாறின.

பஸீனா உலகமே தலையில் இடிந்து விழுந்த நிலையில் அப்படியே மயக்கமாகிச் சாய…. எல்லோரும் பதற ………சில மணித்தியாலங்கள் அந்த வீடே அமளி துமளிப்பட்டது.[181]

**பொருத்தமான மணமகனும் மணமகளும் மணமுடிக்கப்படாமை**. மணமகனுக்குப் பொருத்தமான மணமகளும் மணமகளுக்குப் பொருத்தமான மணமகனும் மணம்முடித்துக்_கொடுக்கப்படாமையின் ளகாரணமாக குடும்பத்தைக் கொண்டு நடத்துவதில் பல சிககல்கள் தோன்றுகின்றன. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பின்மை, ஒருவரின் கருத்துகளை மற்றவர் மதிக்காமை, குடும்ப பராமரிப்புச் சிக்கல்கள் போன்றவை ஏற்படுகின்றன. இவை விவாகரத்து வரை சென்று முடிகின்றன. மணம் வீசாத திருமணங்கள் என்ற சிறுகதையில் சர்மிளா பட்டப்படிப்பு வரை படித்தவளாக உள்ளாள். ஆனால் அவளைத் திருமணம் செய்த ரஹீம் கா. பொ. தா (சாதாரணதரம்) வரையாவது படிக்காதவனாக உள்ளான். இவர்களது வாழ்க்கையில் திருமணத்தின் பின் பல கருத்து மோதல்கள் உருவாகி அவர்களது குடும்ப வாழ்வு நரகமாகி அவர்களது விவாகம் விவாகரத்தில் முடிகின்றது.

''இரவு பத்துப் பதினொரு மணிக்கு வீடுவரும் ரஹீம், காலையில் நித்திரையிலிருக்கும் போதே குழந்தைகள் பாடசாலை போய்விடுவார்கள்…… சர்மிளாவும் வேலைக்குப் புறப்பட்டு விடுவாள்….. மிக விரைவிலேயே ரஹீம் அவளை வேலையிலிருந்து நிறுத்திவிட்டான்…… வீட்டில் தனிமையில் இருக்கும் போது அவளுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போல் இருந்தது……

வாழ்க்கையில் வியாபாரத்தை விட்டால் வேறு ஒன்றையுமே பேசாத, நினைக்காத, பேசத்தெரியாத ரஹீமோடு வாழ்வது நரகமாக்கப்பட்டது. ஆசைக்கு ஒரு பயணம் இல்லை ……பிஸ்னஸ்…. பிஸ்னஸ்..ஒரே…… பிஸ்னஸ் தான்…..

கருத்து முரண்பாடுகள்………… வாய்ச்சண்டைகளாகின. ''ஒன்ன சீதனம் எடுக்காம நான் கலியாணம் முடிச்சேன் இல்ல…… அந்தத் திமுருதான் ஒனக்கு…. சீதனம் தர வக்கில்லாம தானே ஒங்க வாப்பா இரிந்தார்……….''[182]

**படித்த இளைஞர்கள் திருமணத்தின் மூலம் பணக்கார வீட்டவர்களின் அடிமையாக்கப்படுதல்.** பட்டப்படிப்பு வரை படித்த ஏழை இளைஞர்களை தமது பெண் பிள்ளைகளுக்கு மணம்முடித்துக் கொடுக்க பணக்காரப் பெற்றோர் விரும்புகினறனர். இவ்வாறான இளைஞர்களும் பணக்காரின் சொத்துகளுக்கு ஆசைப்பட்டு அவ்வாறான பெண்பிள்ளைகளை மணம்முடிக்கினறனர். ஆனால் சில நேரங்களில் இவ்வாறான யுவதிகள் இந்த இளைஞர்களுக்கு பொருத்தமற்றவர்களாக காணப்படுவதுடன் சில உடலியல் மற்றும் உளவியல் குறைபாடு உடையவர்களாகக் கூட

---

**[181] வாழ்க்கை வண்ணங்கள் (சிறுகதைத் தொகுதி), பக்கங்கள் - 59, 60**

**[182] வாழ்க்கை வண்ணங்கள் (சிறுகதைத் தொகுதி), பக்கம் - 82**

காணப்படலாம். இங்கே திருமணம் நடைபெறுதல் என்று கூறுவதை விட இவ்வாறான இளைஞர்கள் சீதனம் கொடுக்கப்பட்டு பணக்கார குடும்பங்களால் அவர்களின் கௌரவத்தை உயர்த்திக் கொள்வதற்கு விலைக்கு வாங்கப்படுகின்றனர். இந்நிலையில் அவர்களின் விருப்பு வெறுப்புகளை அடக்கிக் கொண்டு பணக்கார வீட்டவர்கள் சொல்லும் அனைத்தையும் செய்ய வேண்டிய நிலை அவர்களுக்கு உருவாகிறது. இதனால் இவர்களது திருமண வாழ்க்கை போலித் தன்மையுடையதாகக் காணப்படுகிறது. சில நேரம் இவ்வாறான இளைஞர்களுக்கு தாம் பிறந்த குடும்பத்தைக் கூட மறந்து செயற்பட வேண்டிய நிலை உருவாகிறது. இவ்வாறான இளைஞர்களின் விருப்பு வெறுப்புகள் கவனிக்கப்படாததால் இத்தகைய திருமணங்கள் விவாகரத்து வரை கூட சென்று முடிகின்றன. மணம் வீசாத திருமணங்கள் என்ற சிறுகதையில் காமில் வஹீதா என்ற பெண்ணை திருமணம் முடிக்கிறான். காமில் பட்டப்படிப்பு வரைக் கற்றவன். வஹீதா மூன்றாம் வகுப்பு வரை கூட கற்காதவளாக இருந்தாலும் பணக்காரப் பெண்ணாகக் காணப்படுகிறாள். சீதனம் கொடுத்த தைரியத்தில் வஹீதாவின் தந்தை காமிலின் குடும்ப விடயங்களில் அதிகமாகத் தலையிடுகிறார். இதனால் காமில் - வஹீதாவின் திருமணம் விவாகரத்தில் போய் முடிகிறது.

''இடையில் வஹீதாவின் தந்தையின் கெடுபிடிகள்……. குத்தல் பேச்சுக்கள்…….

''என்ன….. மவேன்….. சொணங்கி வீட்டுக்கு வர்ரீங்களாமே….. லெச்ச லெச்சமா……. சீதனம் வாங்க முடிஞ்சது போல ஒழுங்கா வாழவும் தெரியணும் இல்ல…… புள்ள வஹீதாவை ஏன் நீங்க எங்கயுமே கூட்டிக்கிட்டு போறதில்ல….. ஒங்களுக்கு நாங்க என்ன கொற வச்சோம்…. காசு தரல்லயா? பங்களா தரல்லயா? கார் தரல்லயா? கிட்டதட்ட எழுபத்தைஞ்சு பவுண் நகை போட்டுத்தானே புள்ளையத் தந்தோம்……………

''ஹோ………'' வென்று தலையைப் பிய்த்துக் கொண்டு கத்தினான் காமில்[183]

**பொறுப்புகள் உள்ள மூத்த சகோதரர்களின் திருமணம் இழுபட்டுச் செல்லுதல்.** ஒரு குடும்பம் தந்தையை இழந்த நிலையில் அக்குடும்பத்தில் உள்ள மூத்த சகோதரனே குடும்பத்தை கவனிக்கின்ற பெறுப்புக்கு பொறுப்புதாரியாகும் அந்தஸ்த்தை சமூகம் வழங்குகின்றது. இந்நிலையில் அவனுக்கு சகோதரிகள் இருந்தால் அவர்களை திருமணம் செய்து கொடுத்த பின் அவன் திருமணம் செய்வதையே சமூகம் அங்கீகரிக்கும். இந்நிலையில் சகோதரிகளை திருமணம் செய்து கொடுக்க சீதனத்தை சேர்ப்பதற்கு உழைக்க வேண்டிய கட்டாய நிலமைக்கு அவன் உள்ளாகின்றான். இந்நிலையில் இதை நோக்கிய உழைப்பிலே அவனது வாழ்க்கை செல்வதால் அவனது திருமணம் இழுபட்டுச் செல்லுகிறது. அவனது சகோதரிகள் திருமணம் முடித்து, குடும்பம் ஆகிய பின்னர் அவர்களுக்கு தம் மூத்த சகோதரனைப் பற்றி சிந்திக்க நேரமில்லை. அவர்கள் அவர்களது கணவன், பிள்ளைகள் தொடர்பாக கவனிக்க வேண்டிய நிலமைக்கு ஆளாகின்றனர். இதுவும் பெறுப்பு வாய்ந்த மூத்த சகோதரர்களின் திருமணம் இழுபட்டுச் செல்லுவதற்கு காரணமாக அமைகின்றது. அவன் எடுத்த முடிவு என்ற சிறுகதையில் ரஹ்மான் தனது சகோதரிகளின் திருமணத்தை நிறைவேற்றுவதற்காக வேண்டி மத்திய கிழக்கு நாடான சவூதிக்கு சென்று உழைக்கிறான். இருபது வருடங்களாக உழைத்து தனது சகோதரிகளின் திருமணங்களை நடத்துகிறான். ஆனால் நாற்பது வயதாகியும் அவனுக்கு திருமணம் நடக்கவில்லை.

''அடுத்தடுத்து நின்ற இளைய சகோதரிகளது திருமணங்களையும் முடிக்க அவன் பட்ட பாடு……. ரஹ்மான் வெளிநாட்டில் இருப்பதை அறிந்து மாப்பிள்ளை வீட்டார்கள் அவனைச் சுரண்டிய விதம்…. அது மட்டுமல்லாது திருமணம் செய்த சகோதரிகளின் பிள்ளைப்பேறுகள்….. குழந்தைகளின் பெயர்

---

[183] **வாழ்க்கை வண்ணங்கள் (சிறுகதைத் தொகுதி), பக்கம் - 84**

சூட்டும் விழாக்கள்……. பெருநாட்கள்….. திருநாட்கள்….. ஓ…… சவுதிக்கு அவனை நோக்கி வரும் எந்த ஒரு கடிதமும் ஏதோ ஓர் தேவையைக் குறிப்பிடாமல் வந்ததில்லையே…..

ரஹ்மானுக்கு வயது கிட்டத்தட்ட நாற்பதை எட்டிய போது தான் வீட்டார் அவனது திருமணத்தைப் பற்றி சற்றே யோசிக்கத் தொடங்கினார்கள்.''[184]

**ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்கள் நின்று போதல்.** சில நேரம் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்கள் திடீர் என எதிர்பார்க்காத விதத்தில் தடைப்படுகின்றன. மணமகனினதும் அவருடைய வீட்டார்களினதும் சுயரூபம் வெளிப்படல், சீதனம் வேண்டாம் என்று திருமணப் பேச்சு வார்த்தையை ஆரம்பித்து இறுதி நேரம் மணமகன் வீட்டார் சீதனத்தைக் கேட்டல் போன்றன இதற்கான காரணங்களாகும். இதனால் மணமகளது வீட்டார்கள் பெரும் இக்கட்டான நெருக்கடிகளுக்கு ஆளாகின்றார்கள். இறுதி நேரங்களில் இவ்வாறு நடைபெறுவதன் காரணமாக மணமகள் வீட்டாருக்கு இப்பிரச்சினையை எவ்வாறு அணுகுவது என்பதே சிக்கலாகிறது. கேட்கச் சொல்லிக் கேட்கும் சீதனம் என்ற சிறுகதையில் வஸீமின் பெற்றோர் திருமணத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்ற பின்னர் பஸீனாவின் பெற்றோரிடம் மறைமுகமாக சீதனம் கேட்கின்றனர். ஆனால் அவர்கள் கேட்டவற்றை பஸீனாவின் பெற்றோரால் கொடுக்க முடியாது போகின்றது. இந்நிலையில் வஸீம், பஸீனா ஆகியோரின் திருமணம் நின்றுபோகின்றது.

''மக பஸீனா என்னம்மா செய்யலாம்…… உம்மம்மா எனக்குத் தந்த காணித்துண்டு ஹேந்தெனியாவில இரிக்கே….. அத விப்பமா என்று நான் யோசிக்கிறேன்…… றஸீனா கூறினாள்.

''உம்மா ஒங்களுக்கு என்ன புடிச்சிருக்கி……பயித்தியமா….. காணிய விக்கிறதா…… சே….. சே…….அதெல்லாம் ஒண்டும் வாணாம்….. பஸீனா உறுதியாய்க் கூறினாள்.

''அப்ப நாங்க என்னம்மா செய்யிறது…………?''

''வாப்பா நான் ஒண்டு சொன்னா என்னோட கோவிக்க மாட்டீங்களே….?

''என்ன பூவே…… இது …..நீங்க சொல்லுங்க'' வழமையாகவே அவர் தன் மகளை பூவே என்று தான் அழைப்பதுண்டு.

''வாப்பா……. வஸீமுக்கு வேற எடத்துல பார்கச் சொல்லுங்க……. எனக்கு அவங்கட ஊட்டு ஆக்கள புடிக்கல்ல…….[185]

***சீதனம் கேட்டல்.*** சீதனம் என்பது திருமணத்துக்கு இருக்கின்ற பெரும் பிரச்சினையாகும். இது மணமகன் வீட்டாரினால் மணமகள் வீட்டாரிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்படுகிறது. சில நேரம் பெண் வீட்டாரிடம் இடைத்தரகர்கள் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மணமகன் வீட்டார் சீதனம் கேட்கின்றனர். மணமகள் வீட்டார் பணக்காரராக இருந்தால் அவர்களிடம் இருந்து அதிகமாக சீதனம் கேட்கப்படுகிறது. சீதனத்தைச் சாட்டாக வைத்துக் கொண்டு பெரும்பாலான மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாரின் சொத்துக்களைக் கவர்ந்து கொள்கின்றனர். மணமகன் வீட்டார் கேட்கின்ற சீதனத்தை கொடுக்க முடியாமல் சில பெண்களுக்கு திருமணம் தாமதப்படுகினறது. சிலருக்கு திருமணம் நடக்காமல் போகின்றது. பெண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் சீதனத்தின் காரணமாக தமது பிள்ளைகளை திருமணம் செய்து கொடுத்துக் கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். மாப்பிள்ளைக்கு அலவன்ஸ் என்ற சிறுகதை மணமகன் வீட்டார் மணமகளின் வீட்டாரிடம் இருந்து எந்தளவு நுணுக்கமாக சீதனத்தை ஊடகமாக வைத்து சொத்துக்களை கவர்ந்து கொள்ள எத்தணிக்கிறார்கள் என்பதைப் புலப்படுத்துகிறது.

---

**[184] வாழ்க்கை வண்ணங்கள் (சிறுகதைத் தொகுதி), பக்கங்கள் - 89, 90**
**[185] வாழ்க்கை வண்ணங்கள் (சிறுகதைத் தொகுதி), பக்கங்கள் - 37, 38**

‘‘தாயும் புள்ளையுமாக இரிந்தாலும் வாயும் வயிறும் வேறில்லையா…. இந்தக் குடும்பத்திலயும் ஏழு பிள்ளைகள் இரிக்கிறாங்க…. நாளைக்குப் பின்ன சொத்துல ஏதும் பிரச்சினைகள் வந்துடக் கூடாது. இல்லையா …… அது தான். நீங்க என்னென்ன குடுக்கிறீங்க என்பத நாங்க இப்பவே தெரிஞ்சிக் கொள்ள விரும்புறம்……..’’

‘‘தயக்கமில்லாம கேளுங்க….. எனக்கும் எல்லாத்தையும் மூடிமறைக்காம பேசுறதுதான் புடிக்கும்.’’ தாஹா ஹாஜியார் முகமலர்ச்சியுடன் கூறிய போது எல்லோருக்கும் மகிழ்ச்சியும் தைரியமும் வந்துவிட்டது.

இப்போது மாப்பிள்ளை இம்தியாஸின் தங்கையின் மாமா பேசினார். ‘‘மிச்சம் நல்லது ஹாஜியார்…. எனக்கும் ஒளிவு மறைவு விருப்பம் இல்ல….. ஏன்ட மகனுக்கு இவங்க நியாயமான சீதனம் தந்தாங்க….அது தான் நானும் இம்தியாஸ் மவனுக்கு பேச்சுமுடிக்க வந்தேன்…… நாங்க புரோக்கரிடம் எல்லாம் சொல்லி இரிக்கோம்……. என்று கூறி புரோக்கரைப் பார்த்தார்.

தாஹா ஹாஜியாரன் மனதில் ஏதோ ஒரு சிறு முள் நெருடத் தொடங்கியது.

என்றாலும் மிக சாதுாரியமாக அவற்றை வெளியே காட்டாமல் மறைத்துக் கொண்டார். அது அவரது சுபாவம்.

‘‘ஹாஜியார் ஒங்கட புள்ளைக்கு எவ்வளவு நகை போடுவீங்க…….?’’

‘‘புள்ளைட உம்மா ஒவ்வொரு புள்ளைக்குமாக ஆளுக்கு இருபத்தைஞ்சு பவுண் நகை செய்து வச்சிரிக்கிறா……… கலியாணத்துல எங்கட குடும்பத்த சேர்ந்தவங்களும் நகை போடுவாங்க…….’’

வந்தவர்களுக்கு ஏற்பட்ட திருப்தியின் சாயல் முகங்களில் தெரிந்தது…….

‘‘அப்போ காணி……’’

எங்களுக்கு மீவலதெனியாவில கொஞ்சம் காணி இரிக்கி…..ஏழு பேருல எல்லோருக்குமே ஆளுக்கு அரை ஏக்கரா நான் ஒப்பினையே எழுதி வச்சிருக்கேன்…….அது நல்ல வருமானமுள்ள காணி……..’’ மாப்பிள்ளை வீட்டார் புரோக்கரைப் பார்த்தனர் நன்றியுடன்[186]

**ஆய்வு முடிவுரை**

நயீமா சித்தீக்கின் வாழ்க்கை வண்ணங்கள் சிறுகதைத் தொகுதியல் உள்ள சிறுகதைகளில் மலையக முஸ்லிம்களின் திருமணம் சார்ந்த பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

**உசாத்துணைகள்**

1. சித்தீக், நயீமா, (2004) வாழ்க்கை வண்ணங்கள (சிறுகதைத் தொகுதி), சிந்தனை வட்டம்
2. சித்தீக், நயீமா, (2017. 05. 26), அம்பகமுவ வீதி, கம்பளை (நேர்காணல்)

[186] **வாழ்க்கை வண்ணங்கள் (சிறுகதைத் தொகுதி), பக்கங்கள் - 116, 117**